**R.C.S.NO.55/2023 IN CMP. NO. 795/2024** **நாள். 09.09.2024.**

**சந்திரசேகரன், த/பெ. கோவிந்தராஜ், 59/76, சோபா நகர், ஆவாரம்பாளையம், கோயம்புத்தூர் என்ற முகவரியில் வசித்து வருபவரின் சத்திய பிரமாண வாக்குமூலம்.**

1. நான் கோயம்புத்தூர் ஆவாரம்பாளையத்தில் குடியிருந்துகொண்டு சிவில் காண்ட்ராக்ட் வேலை செய்து வருகிறேன். எதிரி வரதராஜன் கோயம்புத்தூரில் 2012 ம் ஆண்டு முதல் 2015 ம் ஆண்டு வரை டவுன் பிளானிங் ஆபிசராக பணிபுரிந்து வந்தார். 2014-2015 காலகட்டத்தில் எனது கட்டிடப் பணிக்காக அனுமதி பெறவேண்டி அவரை சந்தித்த வகையில் அவருடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. 2014 ம் ஆண்டு ஜுன் மாதம் கரூரிலுள்ள காயத்திரி நகரிலுள்ள அவரது வீட்டிற்கு என்னை வரச்சொன்னார். அதன்படி நானும் சென்றேன். அவரது வீடடில் எதிரி வரதராஜனும், அவரது மனைவி சாந்தியும் இருந்தனர். அவர்கள் தங்களது வீட்டிற்கு கூடுதல் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு மராமத்து வேலை மற்றும் பெயிண்டிங் வேலை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். எனக்கு அவரால் சில வேலைகள் ஆகவேண்டியிருந்ததால் அவர்கள் சொன்ன வேலையை செய்ய சம்மதித்தேன்.

2. அவர்கள் என்னிடம் வேலை செய்யுமாறும், வேலை முடிந்த பிறகு அதற்குண்டான தொகையை கொடுத்துவிடுவதாகவும் சொன்னார்கள். அதன்படி அவர்களது வீட்டில் கூடுதல் கட்டுமானம் பராமரிப்புப் பணி மராமத்து வேலை மற்றும் பெயிண்டிங் வேலை ஆகியவற்றை செய்து கொடுத்தேன். பெயிண்டிங் வேலைக்கு சுமார் ரூ.5,00,000/-மும், கட்டுமானப் பணிக்கு சுமார் ரூ.20,00,000/-மும் செலவானது. வேலை முடிந்த பிறகு அதற்குண்டான தொகையைக் கேட்டு அவருக்கு போன் செய்தேன். நேரிலும் வந்து பார்த்தேன். அவர் தருவதாகச் சொல்லி இழுக்கடித்தார். ஆனால் தொகையை தரவில்லை. அவரது அலுவலகத்தில் விசாரித்தபோது, அவர் இதேபோல பலமுறை நபர்களை ஏமாற்றியுள்ளதாக

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

தெரிவித்தார்கள். எனவே, 14.09.2019 அன்று மேற்படி தொகையை குறித்து கேட்பதற்காக அவரது வீட்டிற்கு நேரடியாகச் சென்றேன்.

3. என்னுடன் எனது சூப்பர்வைசர் பூபதி த/பெ. வெங்கடாசலம், தனம் நகர், மயிலம்பட்டி, கோயம்புத்தூர், உதவியாளர் ராமமூர்த்தி த/பெ. நாராயணசாமி, சிவசக்தி காலனி, சரவணம்பட்டி, கோயம்புத்தூர் ஆகியோர் வந்தனர். அவரது வீட்டில் எதிரி வரதராஜனும், அவரது மனைவி சாந்தியும் வெளியே வந்து காலங்காத்தாலயே வந்துட்டியாடா தேவடியா மவனே, தாயோலி மவனே என்று திட்டி நீ கேட்கும் தொகையை உனக்கு கொடுக்க முடியாது நீ எங்கு வேண்டமானாலும் சென்று பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டார். நான் அவரிடம் எனது கைக்காசைப் போட்டு செலவு செய்து வேலை செய்துள்ளேன். எனவே, நான் செலவு செய்த தொகையை தாருங்கள் என்று கேட்டபோது, இதேபோல சும்மா கேட்டுக்கொண்டிருந்தால் அடியாட்களை வைத்து கைக்காலை முறித்துவிடுவேன் என்று மிரட்டினார்.

4. மேலும் அங்கிருந்த விறகுக் கட்டையை எடுத்து மேற்படி இருவரும் அடிக்க வந்தார்கள். நான் அவர்களிடமிருந்து தப்பி வந்துவிட்டேன். நான் உடனே 100 க்கு போன் செய்தேன். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்கள். அவர்கள் என்னை காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கச் சொன்னார்கள். அதன்படி கரூர் டவுன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். சி.எஸ்.ஆர். மனு ரசீது கொடுத்தார்கள். விசாரணைக்காக அடுத்த நாள் வரச்சொன்னார்கள். அடுத்த நாள் 15.09.2019 அன்ற சென்றபோது, முதல் தகவல் அறிக்கை கொடுத்தார்கள். அதன் பிறகு என்னிடம் விசாரிக்கவில்லை. இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் மேற்படி வழக்கு முடிக்கப்படுவதாகச் சொல்லி எனது வீட்டிற்கு அறிவிப்பு வந்தது. அதன் பிறகு நான் நீதிமன்றத்தில் எனது வழக்கறிஞர் மூலமாக வழக்கின் நகல்களைப் பெற்று பார்த்தபோது, போலிசார் பிழையான வழக்கு என்றுக் கூறி இறுதி அறிக்கை தாக்கல் செய்திருந்தது தெரிய வந்தது. எதிரிகள் எனக்கு கொடுக்க வேண்டிய

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்

நீதித்துறை நடுவர் எண்.1,

கரூர்.

தொகையை கொடுக்காமல் நான் கேட்க சென்றபோது தகாத வார்த்தைகளால் திட்டி, கொலைமிரட்டல் விடுத்த குற்றத்திற்காக சட்டப்படி அவர்களை அழைத்து விசாரித்து தண்டனை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./-எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.